மலர் 10 ஐப்பசி இதழ் 6

# வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்



"சங்கிலியம்"
என்ற காவியத்துக்குச்
சாகித்திய மண்டலப்
பரிசு பெற்ற
கவிஞர் காரை.
செ. சுந்தரம்பிள்ளை அவர்கள்

1-10-72

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 1 |
| உங்களைப்பற்றி... | 2 |
| தொழிலின்மைப் பிரச்சினைகள் | 7 |
| கவிதை அரங்கம் | 11 |
| பாலர் மலர் | 15 |
| ஒரே ஒரு தெய்வம் | 19 |
| கணக்கியல் | 25 |
| பொது அறிவுப் போட்டி | 29 |


* *

கௌரவ ஆசிரியர் :

குரும்பசிட்டி
மு. க. சுப்பிரமணியம்

விலை சதம் 35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மான் போல

*******

மான்போலத் துள்ளும் குழந்தை — பூத்த
மலர்போலச் சிரிக்கும் குழந்தை.

தேன்போலப் பேசும் குழந்தை — என்
தெய்வ வடிவான குழந்தை.

கண்ணனை கண்ணுக்கு முத்தம் — என்
கட்டிக் கரும்புக்கு முத்தம்.

விண்ணூர் அமுதுக்கு முத்தம் — என்
வீரக் குழந்தைக்கு முத்தம்.

செல்ல அமுதக் குழந்தை — உன்னைச்
சேர அணைத்தொரு முத்தம்.

மெல்ல மழலை மொழிவாய் — உன்
மென்மலர் வாய்க்கொரு முத்தம்.

— சுத்தானந்த பாரதியார்


## விற்பனையாளர்கள் தேவை!

வெற்றிமணி விற்பனை செய்ய

**முற்பணம்கட்டக்கூடியவிற்பனையாளர்கள் தேவை**

பிரதிக்கு 5 சதம் கமிஷன் கொடுக்கப்படும்.

**விளம்பரம்சேகரித்துக் கொடுப்பவர்களுக்கு**

20 சத வீதக் கமிஷன் கொடுக்கப்படும்.

ஆசிரியர்



## — வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவேவிண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

மலர் 10 | ஞாயிற்றுக்கிழமை 1-10-72 | இதழ் 6


# வருந்துகின்றோம்!

முன்பு உதவிக் கல்வி அதிபதியாகப் பணியாற்றிய திரு. கே. எஸ். அருணந்தி அவர்கள் காலமாகி விட்டார்கள். அவர் சாதாரண கல்வி அதிகாரி அல்லர். ஆரம்பகாலக் கல்விப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் கல்வித் தரத்தை உயர்த்தவும் ஆசிரியர் நலன்களைப் பேணவும் தேசப் பற்றுடனும் தமிழ்ப் பற்றுடனும் அயராது உழைத்த ஒரு பெருமகன். சிறந்த ஓர் அறிஞன். சங்க நூல்களிற் தக்க பயிற்சியுள்ளவர்; ஆழமான பேச்சாளர்; கல்வி வளர்ச்சிக்கு மட்டுமல்லாது கன்னித் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தவர். அவர் தமது ஆசிரியர்களைக் கொண்டு பாடுவித்து, தொகுத்த சிறுவர் பாடல் தொகுதி சிறுவர் இலக்கியத்திலே ஒரு முன்னோடியான முயற்சியாகும். இத்தகைய பெருமகனின் மறைவு குறித்து வருந்துகிறோம்.

எழுத்துலகில் ஆற்றல் வாய்ந்த இளைஞர் திரு. செ. கதிர்காமநாதனும் எதிர்பாராத வகையில் எம்மைவிட்டுப் பிரிந்து விட்டார். புதிய பார்வையில் புதிய வேகத்தைக் குழைத்துப் புதிய படைப்புக்கள் பல தந்து கொண்டிருந்த இவரின் மறைவு எழுத்துலகத்துப் பெரும் இழப்பாகும். நிர்வாக சேவையில் எடுபட்டு உயர்ந்த பதவியொன்றைப் பெற்று உன்னதமான இலட்சிய எதிர்காலத்தை நோக்கியிருந்த கதிர்காமநாதனின் மறைவு யாவருக்கும் கவலையைத் தரவல்லது. அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களைப் பற்றி

— நந்தி —

## 8

**தங்கைச்சி** .....

சில மாதங்களுக்கு முன் கண்டியில் தபோவன மாணவ மாணவிகளின் நடன நிகழ்ச்சிக்குப் போயிருந்தேன். எனக்குப் பக்கத்தில் ஆத்மஜோதி ஸ்ரீ முத்தையா ஆசிரியர் இருந்தார். சிவ-பார்வதி நடனம் முடிந்ததும், முத்தையா ஆசிரியர் எனக்குக் கூறினார்:



"நடராஜர் ஆடியதால்தான் பரதநாட்டியம் தப்பியது. எதற்கும் பெரிய இடத்து ஆசி இருக்க வேண்டும்."

எவ்வளவு உண்மை! கடந்த சில மாதங்களாக நான் இந்த முத்துமொழிகளை ஆய்ந்து வருகிறேன். ஆம், தாய்மொழி ஆனாலும் சரி, தாய் நாட்டின் நாட்டியம் ஆனாலும் சரி அதற்கு அரசாங்க அந்தஸ்து இருந்தால்தான் பொதுசன ஆதரவு கிடைக்கும். அல்லாவிடில் காலத்தின் கவலையீனத்தால் அவை குலைந்துபோகும். தமிழ் நாட்டில் பரதநாட்டியத்திற்குக் கிடைத்தது அரச அந்தஸ்து மட்டும்தானா? தெய்வமே நடனத்தின் போஷகனாகவும் இருந்திருக்கிறார்!



நடராஜர் சிலை அழகுக்கும் ஆடலுக்கும் வரைவிலக்கணம். நடராஜர் சிலைக்கு ஆரத்தி ஆகும் போது நிலவும் ஒளி ஜாலத்தில் நான் திவ்ய நடனத்தைக் கண்டிருக்கிறேன். கோவில் பழக்கத்தில் ஆடல் கலை பயில்வது ஒன்று என்பது எனது திடமான கருத்தாகும். இயற்கையோடு இயைந்த ஒரு சமயத்துடன் ஆடல் சமைந்ததில் என்ன ஆச்சரியம்? முருகனின் மயிலும், பரமனின் பாம்பும் — இவை மட்டுமா ஆடுகின்றன? உற்று நோக்கினால் காற்றோடு மரம் கொடிகளும், கடல் அலைகளும், மலை முகில்களும், தீபத்தின் செஞ்சுடரும்......... எல்லாமே ஆடுகின்றன.

தங்கைச்சி...... நீ ஆடல் கற்கிறாயா? பரதநாட்டியம் பயில்கிறாயா? ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணுக்கும் பரதநாட்டியப் பயிற்சி அவசியமாகும். ஒரு பரதநாட்டிய நிகழ்ச்சியை நுட்பமாக ரசிக்கவும், அதனால் ஏற்படக்கூடிய ஆத்ம ஆனந்தத்தை அடையவும் வேண்டிய பழக்கம் இருக்கவேண்டும். பரதநாட்டியத்தில் அசைவுக்கு அழகும், அழகுக்கு அர்த்தமும், அந்த அர்த்தத்தில் ஆத்மீக நிறைவுதரும் சக்தியும் இருக்கின்றது. ஆகையால்தான் தமிழ் மக்களுக்கு பரதநாட்டிய அறிவும் பழக்கமும் அவர்களின் தனித்துவத்தையும் தன்மான உணர்வையும் மேலோங்கச் செய்யும் என்று நம்புகிறேன். ஒவ்வொரு கிராமத்தில் உள்ள பாடசாலையில் அல்லது கோவிலில் சிறு பிள்ளைகள் பரதநாட்டியம் பயிலக்கூடிய வசதிகள் இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஆடலைப்பற்றிக் கூறிய கருத்துக்கள் இசைக்கும் பாடலுக்கும் பொருந்தும். தமிழோடு இசையும் பாடலும் தெய்வ அருச்சனைக்கு உகந்த அம்சங்கள். பல மொழி வல்லுநர், வணக்கத்துக்குரிய தனிநாயக அடிகள், வியாபாரத்திற்கு ஆங்கிலம், சட்டத்திற்கு ஜேர்மன், விஞ்ஞானத்திற்கு பிரெஞ்ச் மொழி என்று மொழிகளின் சிறப்புகளைக் கூறும்போது, பக்திக்குச் செந்தமிழ் என்றார். இந்தச் சிறப்புக்குக் காரணம் பக்திப் பிரவாகத்தில் பிறந்த எங்கள் தேவாரங்கள்தாம்.

தங்கைச்சி...... நான் இங்கிலாந்தில் இருந்தபோது, சில ஆங்கில வாலிபருக்குச் சில தேவாரப் பாடல்களின் ஒலிப்பதிவைப் போட்டுக் காட்டினேன். ஒரு நிலையில் அவர்கள் இருந்தபடியே மெல்லிய காவடி ஆட்டம் ஆடினர். தேவார இசையில், ஜன இரஞ்சித 'பொப்' இசையின் உள்ளக் களி உந்தல் இருப்பதாகக் கூறினர்.

இது உண்மை. இளம் உள்ளங்களுக்கு ஏற்ற தேவாரங்களும் தேவார மெட்டுக்களும் உண்டு. அவற்றைத் தெரிந்து எடுத்துத் தக்க முறையில் தருவது பெரியோர்களின் கடமையாகும். கோவில்களுக்கு பஸ் நிறையத் தமிழ்ப் பிள்ளைகள் போகும் போது கூட பைலா பாடுகிறார்கள். இளைஞருக்கு ஏற்ற தேவாரங்களும், அழகிய தமிழ்ப் பாடல்களும் உடனடியாக நடைமுறைக்கு வரவேண்டும்.

நீங்கள்...... அடுத்தமுறை நல்லூர் போகும் வேளையில், நல்லூர்க் கோவிலை அடுத்து இருக்கும் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளின் பஜனைகளையும், தேவார வகுப்புகளையும் கேட்கவேண்டும். அங்கே தமிழின் தெய்வீக ஒலியைக் கேட்க முடியும்.



**சுருக்கம்:-**

கோவில் பழக்கம் (vi) ஆடலும் பாடலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்து மேதை அருணந்தி மறைவு

— மகேஸ்வரன் —

1. உளவியற் றுறையினிலே புலமைமிக்க
ஒருமேதை ஈழத்தும் உள்ளானென்று
நிலவியநற் புகழ்மொழியும் பொய்யேயாக
நிலவுலக வாழ்வைவிட்டு நீங்கிச்சென்றான்;
அழகுமொழித் தமிழுரைக்கும் அருணந்திப்பேர்
அறிஞனென வறிந்ததுமே, அனலிற்பட்ட
மெழுகதென்ன வுளமுருகிச் சோர்ந்த(து) அந்தோ
விதிசெய்யுஞ் சதியினையார் விலக்கவல்லார்?

2. உளச்சார்பின் தன்மையினை மூவர்கொண்ட
ஒருசெவிட்டுக் குடும்பத்துக் கதையின்மூலம்
விளக்கியதை நினைத்தாலுஞ் சிரிப்புத்தானாய்
வெடித்துவரும்; இதுபோன்று விவேகமாகத்
துளைத்தெடுக்குஞ் சிந்தனைதோய் சுவைப்பேச்சாளன்;
துள்ளிவரும் புதியகலைத் துறைகள்யாவும்
விளைத்தெடுக்கு மார்வமுள்ளோன்; இலங்கைமுன்னாள்
வித்தியாதி பதிமறைந்தும், மேதைவாழும்!

**விற்பனையாகிறது!**

**பரீட்சையிற் சித்தியடைவது எப்படி?**

— வி. கந்தவனம்

விலை 2-00 ரூபா

— வெற்றிமணி வெளியீடு —

ஏக விற்பனையாளர்

ச. கிருஷ்ணசாமி

33, பெரிய கடை — யாழ்ப்பாணம்,

## தொழிலின்மைப் பிரச்சினை

### (வேலையில்லாப் பிரச்சினை)

— வி. கந்தவனம் பீ. ஏ. —

தொழிலின்மைப் பிரச்சினை இன்று எமது நாட்டின் தலையாய பிரச்சினையாகிவிட்டது. சமீபகாலப் புள்ளி விபரங்களின்படி ஆண்டு தோறும் 1,20,000 பேர் தொழில் தேடுகின்றனர். இவ்விதம் சேர்ந்தோர் தொகையினராக 5,50,000 பேர் இன்று தொழிலின்றி இருக்கின்றனர். இத்தொகை நாட்டிலுள்ள வேலை செய்யத்தக்க ஆற்றலுடைய தொகையினரில் 12 சத வீதமாகும்.

இத்தொகை ஆற்றலுள்ள மக்கள் தொழில் பெறாதிருப்பதற்கான காரணங்கள் பல.

1. தொழிலற்றோர் தொகை பெருகிவரும் வேகத்துக்கு ஏற்பப் பொருளாதார வளர்ச்சி வேகமுறவில்லை. அதாவது, தொழில் தேடுவோருக்கு வாய்ப்பளிக்கும் வகையில் கமத்தொழில், கடற்றொழில், கைத்தொழில் ஆகிய துறைகள் அபிவிருத்தி செய்யப்படவில்லை. பொருளாதாரத்தின் பிற துறைகளிலும் தொழில் வாய்ப்பைப் பெருக்குந் தன்மையில் முதலீடு செய்யப்படவில்லை. இப் பிழைபாடு கடந்த கால அரசாங்கங்களின் முதலீட்டுக் கொள்கைகளின் விளைவேயாகும். பிரதானமாக, கைத்தொழில் துறையில் தொழிலாளர் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் முறைகள் பயன்படுத்தப்படவில்லை. கட்டட அமைப்பு, நீர்ப்பாசன வேலைகளிற்கூட தொழிலாளர் உழைப்பினைப் பிரயோகிக்கக்கூடிய வகையில் திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

2. தொழிலின்மைப் பிரச்சினைக்கு மற்றுமோர் பிரதான காரணம், இதுவரை காலமும் இருந்துவந்த எமது நாட்டுக் கல்வித் திட்டமுமாகும். இக் கல்வி முறை பொருளாதார அபிவிருத்திக்கு வேண்டிய மனித சக்தியை வளர்ப்பதற்குப் பதிலாக நாட்டுக்குப் பயன்படாத பரீட்சைகள், பட்டங்கள், டிப்புளோமாக்கள் என்பவற்றுக்கே முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. அதாவது நாட்டின் தேவையை நிறைவேற்றும் வகையில் கல்வித் திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையவில்லை. நாட்டை அபிவிருத்தி செய்யும் திட்டமாக அமையாது நாட்டை உறிஞ்சும் திட்டமாக எமது கல்வித் திட்டம் இருந்துவந்துள்ளது. இதன்விளைவாக இன்று எமது நாட்டின் அபிவிருத்திக்கு வெளி நாட்டுத் தொழில் நுட்ப ஆற்றல், வெளி நாட்டு மூல வளம், வெளி நாட்டு வல்லாளர் உதவி ஆகியவற்றிலே தங்கியிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தொழில் துறையோடு தொடர்பற்றதாக உள்ள இக் கல்வி முறை, நாட்டில் இலகுவாக அபிவிருத்தி செய்யக்கூடிய உற்பத்தி நிலையிலிருந்து, ஒரு சந்ததியினரையே பிரித்துப் புறம்போக்கிவிட்டது.

இதுமட்டுமன்றி, இக் கல்வி முறை ஏதாவது உற்பத்தித் தொழிலில் ஈடுபடக்கூடியவர்களையும் வெண் சட்டை உத்தியோகங்களின் நாட்டமுறச் செய்துவிட்டது. இக்கல்வி முறை மக்களை சுயமுயற்சி, தொழிலார்வம் என்பவற்றில் ஊக்கமளிக்காது, அரசாங்கத்துறையில் பணி செய்யும் — எழுதுவினைஞராய்த் திகழும் — நிலையை நாடுமாறு உருவாக்கி விடுவதாயிற்று.

3. இன்றைய தொழிலின்மைப் பிரச்சினைக்கு மக்களின் தொழில் மனப்பான்மையும் ஒரு காரணமாகின்றது. ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு ஆட்களே தேவைப்படலாம். ஆனால், அந்தத் தொழிலையே அதிகமானோர் நாடும்பொழுது பிரச்சினை உருவாகின்றது. உதாரணமாக க. பொ. த. சாதாரண பரீட்சைகளிற் சித்திபெற்றவர்களிற் பெரும்பாலோர் எழுதுவினைஞர் தொழிலையே நாடுகின்றனர். அதாவது, சிரமமும் ஊக்கமும் குறைவான கதிரை - மேசை உத்தியோகங்களையே விரும்புகின்றனர்.

இன்னுஞ் சிலர் படிப்பிருந்தும் பணமிருந்தும் அவற்றை உற்பத்தித் தொழில்களுக்குப் பயன்படுத்தும் நோக்கமும் ஊக்கமும் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். கடினமாக உழைத்து முன்னேறும் நோக்கமின்றி இலேசான - சொகுசான வாழ்க்கை நடாத்த விரும்புகின்றவர்கள் நாட்டுக்குப் பிரச்சினையானவர்கள். அவர்கள் எதற்கும் அரசாங்கத்தையே எதிர்பார்ப்பர். இத்தகையோரின் மனப்பான்மை மாறவேண்டும். நாட்டின் உற்பத்தித் துறைகள்



இனிமேலும் இவர்களுக்கு ஆதரவு நல்கும் என்று எதிர்பார்க்க முடியாது.

இன்னுஞ் சிலர், வெளிநாட்டில் உத்தியோகம் பார்த்தலே சிறப்புடைத்து என்று கருதுபவர்களாயுள்ளனர். தமது நாட்டிலே, தமது நாட்டுப் பணத்திலே படித்துவிட்டுப் படித்த அறிவையும் பெற்ற அனுபவத்தையும் தமது நாட்டுக்கே உழைக்கப் பயன்படுத்தவேண்டுமென்ற எண்ணமில்லாது வெளி நாடு செல்கின்றனர். இவ்விதம் வெளி நாடு செல்வோர் எமது நாட்டின் அபிவிருத்திக்கு உழைக்கத் தலைப்படின் தொழில் வாய்ப்புகள் மேலும் பெருக வழியுண்டு.

தொழிலின்மைப் பிரச்சினையால் இன்று வேறு பல பிரச்சினைகளும் தோன்றியுள்ளன. இளைஞர் மத்தியில் அமைதியின்மை, களவு, கொள்ளையடித்தல் முதலியன பெருகியுள்ளன. இவற்றால் தொழிலின்மைப் பிரச்சினையின் தாக்கம் இன்று நாட்டை வெகுவாகப் பாதித்துள்ளது. இப் பிரச்சினையின் பாரதூரமான விளைவுகள் முன்பு உணரப்படாமலில்லை. கடந்த அரசாங்கம் விவசாயத்துறையைப் பெரிதும் விருத்திசெய்து, விவசாயிகளுக்கு முக்கியத்துவம் அளித்து, விவசாய மன்னர்களை உருவாக்கி, விவசாயப் படைகளைத் திரட்டி வேலையில்லாத இளைஞர்களை விவசாயத்தில் ஈடுபடச் செய்த விதத்தை எல்லோரும் போற்றுவர்.

இன்றைய அரசாங்கமும் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றது.

கைத்தொழில், கமத்தொழில், கடற்றொழில் ஆகிய துறைகள் வேலைவாய்ப்புகள் பெருகும் வகையில் விருத்தியாக்கப்படுகின்றன. சிறு கைத் தொழில்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளன.

பாடத்திட்டம் நாட்டின் தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இப் புதிய திட்டத்திலே தொழில் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலின்மைப் பிரச்சினையையும் பிற சமூக நெருக் கடிகளையும் தீவிரமாகத் தீர்க்கும்பொருட்டு ஐந்தாண்டுத் திட்டமொன்றை அரசாங்கம் வகுத்துள்ளது. இது நாட் டின் வளங்களை முழுமையாகப் பயன்படுத்திப் பொருளா தாரத்தைப் பெருக்கவும் நாட்டின் அபிவிருத்தியில் மக் களை ஈடுபடுத்தவும் வல்ல நிகழ்ச்சித் திட்டமாகும். இது ஒரு குறுகிய காலத் திட்டமெனினும் எதிர்காலப் பொரு ளாதார வளர்ச்சிக்கும் நன்கு வழிவகுக்கின்றது. இத் திட் டம் செவ்வனே நடைமுறைப்படுத்தப்படின் தொழிலின் மைப் பிரச்சினைப் பளு குறுகிய காலத்துக்குள்ளேயே குறைய வாய்ப்புண்டு.

இத் திட்டமோ, வேறு பொருளாதார அபிவிருத்தி முறையோ வெற்றி பெறவேண்டுமாயின், நாடு அதன் தேசிய வருமானத்தில் இயன்றளவு சேமிக்க முயலுதல் வேண்டும். அப்போதுதான் பொருளாதாரத்தின் உற்பத்தி ஆற்றலளவு அதிகரித்துத் தொழில் வாய்ப்புகளும் பெரு கும். இதன் விளைவாக மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர வழிபிறக்கும்.

---

## மதுரகவி இ. நாகராஜன் குடும்ப நிதி

சென்ற இதழில் வெற்றிமணி வாசகர்கள் ஷை நிதிக்கு ஆதரவு கொடுக்கவேண்டுமென்று கேட்டிருந்தோம். நிதி அனுப்பியவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றோம். வாசகர்கள் தங்களால் இயன்ற நிதியை அனுப்புவார்கள் என எதிர் பார்க்கின்றோம்.

— ஆசிரியர்

| | | |
|---|---|---|
| 1. | குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலய ஆசிரியர்கள் | 25-00 |
| 2. | திரு. க. இ. சரவணமுத்து சைவத் தமிழ்ப் பாடசாலை, உரும்பிராய். | 25-00 |
| 3. | திரு. ச. பஞ்சாட்சரம் ஷை ,, ,, | 25-00 |
| 4. | திரு. செ. சிவஞானசுந்தரம் பேராதனைப் பல்கலைக் கழகம். | 21-00 |
| 5. | திரு. சி. சுந்தரசிவம் சரவணபவாநந்த வித்தியாசாலை | 10-00 |
| 6. | திரு. ச. முத்தையா உரும்பிராய் சந்திரோதய ,, | 10-00 |
| 7. | செல்வி தி. அருளம்பலம் கைதடி நுணுவில். சாவகச்சேரி. | 5-00 |
| 8. | ,, தனம் கந்தையா மட்டுவில் தெற்கு, ,, | 5-00 |
| | | 126-00 |

# கவிதை அரங்கம்



## அமுதப் பால் அளித்திடுவாள்!

— தேவன் —

கலைமகள் அன்னையின் திருவடியை
காலையும் மாலையும் வணங்கிடுவோம்!
விலையிலா மாமணிக் கல்வியை
வித்தகி யாளருள் புரிந்திடுவாள்!

தேனூறுஞ் செந்தமிழ் பாட்டிசைத்து
தேவியின் பொற்பதம் போற்றிடுவோம்!
வானூரும் மதிரவி ஒளியறிவை
வாணியின் அருளால் பெற்றிடுவோம்!

செவிநுகர் விழிகரம் வாய்மலர்கள்
சேர்த்திடு வோமாரஞ் சூட்டிடுவோம்!
புவியெல்லாம் மணநதரும் புதுமொழிகள்
பூவித ழாயொன்றிப் பூத்தருள்வாள்!

தேன்மலர் உள்ளத் தேரினிலே
தெளிவளர் அன்னை சாரதையை,
ஊனுயி ரால்தினம் போற்றிடுவாம்
உயர்கலை எல்லாம் உவந்தளிப்பாள்!

முத்தமிழ் செப்பிடும் ஒலியினிலே
முத்தொளி வீசிட யாழிசைப்பாள்!
சித்தரோ, பித்தரோ, சேயானலும்
செழுங்கலைப் பாலமு தளித்திடுவாள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவர் எழுச்சி!

— திக்குவல்லை கமால் —

காலைக் கதிரோன் கண்விழிக்க,
கலப்பை ஏந்தித் தோளுயர்த்தி
வேலைக் காகவயல் நோக்கி
விரையும் உழவர் எழில்பாராய்!

வரம்பும் உயர்த்தி நீர்பாய்ச்சி,
வளமார் விதைகள் தமைத்தூதி,
அரும்பும் வேர்வை உரமாக்கி,
அயரா துழைக்கும் நிலைபாரீர்!

காலை முதலாய் மாலைவரை
கண்போல் கழனி சீர்செய்து,
நாளும் பொழுதும் நெல்விளைத்து
நாட்டைக் காப்போர் பணிபாரீர்!

நாட்டுக் கேற்ற உணவிங்கே
நல்கி நிறைவு புரிவதெனும்,
நாட்டம் கொண்டே நிதமுழைக்கும்
நல்ல உழவர் எழுச்சிஅதோ!

※ ※

## அருள் தேடு!

... மூதூர் கலைமேகம் ...

வாழும் வகையினை வளமுடனாக்கிய
வல்லவன் அருள் தேடு
நாளும் கெடுவினை நம்மை விட்டோடிட
நாயகனின் பணி நாடு!

நல்லவை தீயவை நன்றே உணர்த்திய
நாயகன் நெறி பாடு
பல்லின மக்களும் புகழ்ந்தே போற்றிடும்
பெரியவன் துணை தேடு

ஈர்த்திடும் சக்தியால் இவ்வுலகாக்கிய
இறையவன் எனப் பாடு
பார்ப்பவை எங்கிலும் படைத்தவன் உண்டென
பணிக் கரம் குவித்தாடு

விண்ணினைத் தாவும் விவேகத்தை ஈந்த
வேலவன் புகழ் பாடு
மண்ணிலே நாளும் மகிழ்வினைத் தந்த
மன்னவ னென் றாடு!

## தீப மேற்றிடுவாய்!

க. மொழிவரதன் (மகாலிங்கம்)

தீப மேற்றிடுவாய் — பெண்ணே
தீப மேற்றிடுவாய்!

மங்கையர் குங்கும மிட்டிட
மாலை தோரணம் வீட்டினி லாடிட
பொங்கும் புன்னகை யெங்கும் தங்கிட
புது வாழ்வு பலரும் பெற்றிட

தீப மேற்றிடுவாய் — பெண்ணே
தீப மேற்றிடுவாய்!!

இருள ரக்க னோடி ஒளித்திட
இல்லாமை இல்லா தொழிந்திட
அரு ளொளி யெங்கும் வீசிட
அன்பே இன்பமாய்த் துலங்கிட

தீப மேற்றிடுவாய் — பெண்ணே
தீப மேற்றிடுவாய்!!!

* * * *

## குழந்தை

— மூதூர் 'கலைமேகம்' —

சின்னக் குழந்தை யென்றால் — எனக்கொரு
செல்லம் பிறக்குமடி, அதன்
வண்ண மழலை யென்றால் — நெஞ்சம்
வெம்பி மகிழுதடி!

பிஞ்சிக் கரம் நீட்டி — காலைப்
பின்னித் துடிக்கு மெழில்
கொஞ்சி மகிழுதற்கு — இன்பம்
கோடி பெருகுமடி!

வண்ண இதழ் கூப்பி — முத்து
வெல்லம் உறுஞ்சும் சுவை
எண்ண மனம் மகிழும் — பிள்ளை
இன்மொழிக் கீடிலையே!

செல்வத்துட் செல்வ மென்றால் — அது
சின்னக் குழந்தையடி
சொல்லில் உரைத் திடிலோ — எந்தன்
சிந்தை குளிருதடி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் நாடு

சி. பத்மநாதன், அரசடித்தீவு.

நாடு நல்ல நாடு எங்கள்
நாடு ஈழ நாடு.
காடு உள்ள நாடு நீலக்
கடல்கள் சூழ்ந்த நாடு.

மலைகள் ஆறு சூழ்ந்து - நல்ல
வடிவு காட்டும் நாடு
அலைகள் பாயும் நாடு - இந்த
அவனியி லோர் தீவு.

தமிழ ரோடு பலரும் நன்கு
சார்ந்து வாழும் நாடு.
அமிழ்த மொத்த அழகை வாரி
அள்ளித் தரும் நாடு.

இலங்கை மன்னன் இராவணன்
இருந்த ஈழ நாடு.
தலங்கள் உள்ள நாடு இன்பத்
தமிழர் வாழும் நாடு.

### நேயர் குரல்

'நேயர் குரல்' என்ற பகுதிக்கு வெற்றிமணி பற்றிய அபிப்பிராயங்களைச் சுருக்கமாக எழுதியனுப்பினால் வெளியிடப்படும்.

— ஆசிரியர்




## உண்மைப் பெரியார்

அ. ஜெயப்பிரகாசர், நாவற்காடு, மாம்புரி.

உலகிலே தோன்றி மறையும் எண்ணற்ற கோடி மக்களுள் கைவிரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே எம்மால் எப்பொழுதும் நினைக்கப்படுகின்றார்கள். அந்த ஒரு சிலர் தமக்கோ தம் நாட்டுக்கோ தம் சமுதாயத்துக்கோ உலகிற்கோ ஏதோ ஒரு வகையில் செயற்கரிய உதவியையும் பணியையும் புரிந்து தம் பெயரை நிலை நாட்டிச் சென்றவர்கள். அவர்களுடைய பூத உடல் மறைந்த போதிலும் புகழ் உடம்போ என்றுமே மறையாது. சாகா இடம் பெற்றுத் திகழும்

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்"

என்று உலகப் பொதுமறை தன்னை உலகிற்கு ஈன்றளித்த பொய்யில் புலவனும் வள்ளுவரும் அழகாகக் கூறி உண்மைப் பெரியார் எனப்படுவதற்கு உரித்தானவர் யாரென்பதைத் திறம்படக் காட்டிப் போகின்றார். உலகிலே ஆறறிவு படைத்த மனிதனாகப் பிறந்தவன் தனக்குத் தானாக தன் சமுதாயத்தினராலோ நாட்டினராலோ புகழப்பட இவ் வையகத்தில் வாழ்வாங்கு வாழா தொழிவானேயானால் தோன்றித்தான் பயன் என்ன? இக் கருத்தினைத்தான் வள்ளுவர் மேலும் கூறுகின்றார்;

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

வள்ளுவர் கூற்றின் பிரகாரம் உண்மைப் பெரியார் எனப்படுபவர் யார் என்பதை அறிந்து உணர்ந்து நாமும் மனிதனாகப் பிறந்ததன் நோக்கத்தை நிறைவேற்ற ஓரளவாவது முயல்வோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறு கதை:

# ஆய்! ஆய்!!

செய்னுலாப்தீன் அப்துல் கப்பார், மரு முனை - 2.

தஞ்சா ஊரிலே ஒரு தனவந்தர் இருந்தார். அவர் ஒவ்வொரு வருடமும் தனது வீட்டில் ஒரு வேலைக்காரனை வைத்திருப்பது வழக்கம். வேலைக்காரனைச் சேர்க்கும்போது ''வருட முடிவில் சம்பளம் தருவேன்'' என்ற நிபந்தனையில் சேர்ப்பார். அவனுக்கு வருடம் முழுவதும் உணவும், உடையும் கொடுத்து வைத்திருப்பார்.

வருட முடிவில் வேலைக்காரனை அழைத்து அவனிடம் பத்து ரூபாவைக் கொடுத்து எங்கும் எடுக்க முடியாத பொருளின் பெயரைச் சொல்லி அதை வாங்கி வரும்படி கூறுவார். வந்தபின் கணக்கைப் பார்த்து வரவேண்டிய சம்பளப் பாக்கிப் பணத்தைத் தருவேன் என்றும் வாங்கி வராவிட்டால் அவன் உயிரை வாங்கி விடுவேன் என்றும் கூறுவார். வேலைக்காரன் தனவந்தன் கொடுத்த பணத்தை எடுத்துக்கொண்டு ஊர் முழுக்கத் தேடுவான். அது எங்கும் அகப்படாமையினால், வேலைக்காரன் தனவந்தனின் வீட்டுக்கு வராது ஓடிவிடுவான். இவ்வாறு ஒவ்வொரு வருட முடிவிலும் வேலைக்காரன் சம்பளம் கேட்கும்போது இப்படிச் சொல்வது வழக்கம்.

இறுதியில் அந் தனவந்தருக்குப் புத்திசாலியான ஒரு வேலைக்காரப் பையன் வந்து சேர்ந்தான். வருட முடிவில் சம்பளம் கேட்கும்போது அவனிடம் பத்து ரூபாவைக் கொடுத்து எங்காவது போய் ''ஆய்! ஆய்!! வாங்கி வா. வாங்கி வந்த பின் உன் கணக்கைப் பார்த்து சம்பளத்தைத் தருவேன்'' என்றார். பையன் பணத்தை எடுத்துக் கொண்டு அவ் வூரிலுள்ள கடைகளிலெல்லாம் தேடினான். கடையிலுள்ளோர் அவனைப் பார்த்துப் பரிகாசம் செய்தனர். இறுதியாக ஒரு போத்தலை எடுத்து அதனுள் ஒரு தேளையும், குளவியையும் பிடித்துப் போட்டுக் கொண்டு தனவந்தரின் வீட்டுக்கு வந்தான்.

வேலைக்காரன் வீட்டுக்கு வருவதைக் கண்டதும் அதிசயம் அடைந்தார் தனவந்தர். வேலைக்காரனைப் பார்த்து



''ஆய்! ஆய்!! வாங்கி வந்தாயா?'' என்று கேட்டார். ஆம் என்று சொல்லிப் போத்தலைத் திறந்து தேளை எடுத்து அவருடைய கையில் வைத்தான்; தேள் அவரது கையில் மாறி மாறிக் கொட்டியது. குளவியையும் எடுத்து உடம்பில் விட்டான். இரண்டும் மாறி மாறிக் கொட்டின. கொட்டும் போதெல்லாம் ''ஆய்! ஆய்!!'' எனச் சத்தமிட்டார்.

அப்பொழுது வேலைக்காரன் தனவந்தரைப் பார்த்து, ''இதுதான் ஐயா தாங்கள் வாங்கிவரச் சொன்ன 'ஆய்! ஆய்!!'' என்றான். தனவந்தர் வெட்கமடைந்து வேலைக்காரன் கேட்டளவு பணமும் உடையுங் கொடுத்து அனுப்பினார். வேலைக்காரன் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினான். அன்றிலிருந்து தனவந்தர் தனது முந்திய செயலைவிட்டுத் திருந்தி நடந்தார்.

[யாவும் கற்பனை]

# நீர்மின் நிலையம் இங்கினியாக்கலை

வீ. போகிதாஸ்

பட்டிப்பளை ஆற்றை மறித்து, அணைக்கட்டு அமைத்து சேனநாயக்கா எனப் பெயர் சூட்டி உள்ளனர். இதில் தண்ணீர் கொள்ளளவு 34 ச. மைல் (Water Spread) தண்ணீர் வடிந்துவரும் பரப்பு (Catchment Area) 384 ச. மைல். அணைக்கட்டின் உயரம் கடல் மட்டத்தைவிட 260 அடி (260 M. S. L.) சே. சமுத்திரத்தின் ஆழம் 110 அடி; மின்சார நிலையம் 150 அடி அணைக்கட்டின் கீழ் அமைந்துள்ளது. இதனால் நீர் வேகமாகப் பாயும்.

மின்சார நிலையத்தில் நான்கு டைனமோக்கள் (Generators 4 Nos.) உண்டு. உற்பத்தியாகும் வோல்ரேஜ் 6,900 (6900 Volts) 12 மெ. வலுவைப் (12 M. W.) பெறலாம். மொத்தமாக சே. சமுத்திரத்திலிருந்து நீர் 13 அடி விட்டமான குழாய் வழியாக ஓடி வந்து, சேர்ஜ் ராங்கில் (Surge Tank 112ft. height) நிரப்பிச் சிறிய நான்கு குழாய்களினூடாக டைனமோவின் சக்கரத்தை (Turbine சுற்றுகிறது. இதனால் மின்சக்தி உற்பத்தியாகிறது. பைசிக்கிள் டைனமோவை உதாரணமாகக் கூறலாம். இதில் சில்லு சக்கரத்தைச் சுற்றுகிறது. ஆனால் இங்கே நீர் சுற்றுகிறது. காந்த சக்தியின் ஊடாக மின்சாரம் உற்பத்தியாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சே. சமுத்திரத்திலிருந்து 728 அடி தூரத்தில் சேர்ஜ் ராங்க் உள்ளது. இது சே. சமுத்திரத்தின் நீர் மட்டத்தையே சமப்படுத்துகிறது. இதனுல் அமுக்கத்தில் வேறுபாடு கிடையாது. இப் பிரதான குழாயிலிருந்தும் 6 அடி 6 அங். விட்டமான நான்கு சிறிய குழாய்கள் மூலம் சுழல் சக்கரத்திற்கும், இரு குழாய்கள் மூலம் நீர்ப்பாசனத்துக்கும் பாயும்.

டைனமோ வேலே செய்யும்போது வெளியேறும் நீர், நீர்ப்பாசன இலாகாவால் வேண்டிய அளவுக்கு வாய்க்கால் மூலம் உபயோகிக்கப்சடும். மேலதிகமாய் நீர் தேவைப்பட்டால் இரு நீர்ப்பாசனக் குழாய்களும் திறந்துவிடப்படும். இங்கு மின்கருவி (Generators) வேலே செய்யாவிடினும் நீர் வயல்களுக்கு இரு குழாயின் ஊடாகச் செலுத்தப்படும்.

மின்நிலேயத்தில் அதிகமான உபகரணங்கள் தாமாகவே இயங்கக் கூடியவை. நெருப்பு அணேக்கக் கரியமில வாயுவும் உண்டு. தாஞகவே இயங்கும் (Automatic Operation). சே. சமுத்திரத்தில் மேலதிக நீர் வந்தால் வடிந்தோட (Spillwaydam) வான் கட்டுண்டு. இதனுள் 6 கதவுகள் உண்டு. இது 770 அடி நீளமும் 5 அடி அகலமும் ஆகும்.

மூன்று பிரதான மின்விநியோகப் பகுதிகள் உண்டு. அவை: முதலாவது பதுளேக்கு 66 கில்லோ வோல்ட்ஸ் (66 k. v.) மின்னும் இரண்டாவது மட்டக்களப்புக்கு 33 கி. வோ. (33 k. v.) மின்னும், மூன்ருவது கிங்கிராலேப் பகுதிக்கு 33 கி. வோ. (33 k. v.) மின்னும் கொடுக்கப்படுகிறது. அணேக் கட்டில் நீர் மட்டம் குறைந்தால் லக்சபாஞவிலிருந்து மின் பெறலாம். சிலசமயங்களில் மேலதிக சக்தியை பதுளே மூலம் வேறு இடங்களுக்கு அனுப்பலாம்.

இம் மின்நிலேயத்தை நிர்வகிப்பதற்குப் போதிய நம் நாட்டுப் பொறி நிபுணர்கள் (Technical Staff) உண்டு. அவர்களால் எவ்வித பிழையையும் சரிசெய்ய முடியும். கல்லோயா மின்திட்டம் 1949-ம் ஆண்டு காலஞ்சென்ற முன்னுள் பிரதமர் D. S. சேனநாயக்காவால் ஆரம்பிக்கப்பட்டது. இதனுல் மின்சாரமும், நீர்ப்பாசனத்திற்கு நீரும் ஒரே நேரத்தில் பெறப்படுகிறது. இதைப் பலநோக்குத் திட்டம் (Multipurpose Scheme) என அழைக்கலாம். அணேக்கட்டு 1 : 8 மண்ணே அமுக்கி இரு மலேகளுக்கு மத்தியில் $\frac{3}{4}$ மைல் நீளத்துக்குக் கட்டப்பட்டுள்ளது சுற்றிவர இயற்கையாகவே மலேகள் அமைந்துள்ளன. மின் நிலேயத்துக்கு சே. சமுத்திரததிலிருந்து உள்ளடக்கும் நிலேயத்தின் (Intake Tower) மூலம் நீர் வேகமாய் ஓடுகின்றது. இதைத் திறக்கவும் மூடவும் 15 குதிரை வேக மின் மோட்டார் மூலம் முடியும்.

# ஒரு ஒரே தெய்வம்



— குரும்பசிட்டி, கே. எஸ். சிவகுமாரன் —

## 6

மீஞவோ பாஸ்கரைக் காஞது தரையில் இட்ட மீஞகத் துடித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன எதையோ பறிகொடுத்தவள்போல் ஏங்கிக் கொண்டிருக்கிருயே! ஏன் அவனுடனேயே போய் இருக்கலாமே!" என்ருன் மீஞவின் கணவன்.

"அவனேடையல்ல; அவனே முந்திவிட்டு யான் போகத் துடித்தேன். ஆனுல் இந்தப் பிஞ்சு உள்ளங்கள் மீதுள்ள பாசம் என்னேக் கட்டிப்போட்டுவிட்டது அத்தான். ஒவ்வொரு நாளும் செத்துப் பிழைத்துக்கொண்டிருக்கிறேனே! என்னே ஒரேயடியாகக் கொன்றிடுங்கோ"

"என்னடி அத்தனே பாசமா அவன்மீது? யாரடி அந்த அயோக்கியன்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அத்தான்! என்னை வேண்டுமென்றால் கொல்லுங்கள். நீங்கள் தொட்டுத் தாலி கட்டிய குற்றத்திற்காகத் தாங்கிக் கொள்கின்றேன். ஆனால் அந்த அன்பு வடிவத்தை இன்னொரு முறை ... ஐயோ ... இல்லை இல்லை. முன்பு சொன்னமாதிரிச் சொல்லாதையுங்கோ அத்தான்!''

''அயோக்கியன்! அயோக்கியன்! அயோக்கியன்!'' என்றே அவன் படுத்திருந்த கட்டிலைப் பார்த்துச் சுட்டு விரலால் சுட்டிக் காட்டிக் கத்தினான்.

''அந்தச் சுட்டுவிரலைத் தவிர மிகுதி நான்கு விரல்களும் உண்மையான அயோக்கியன் யார் என்பதைக் காட்டிக் கொண்டிருக்கிறதே - அதைக் காண மறந்திட்டீங்களே அத்தான் மறந்திட்டீங்களே!''

''அவனுடைய சொத்துக்களைக் குடியிலே அழித்தீங்களே அத்தான்! அழித்தவன் அயோக்கியனா? இல்லை தான் அழிந்தழிந்து மற்றவர் மகிழ்விலே இன்பங் காண்கின்ற அவன் அயோக்கியனா?''

சுழலும் மின்சார விசிறி இப்பொழுது மீனா பக்கம் காற்றை வீசிக்கொண்டிருக்கிறது.

''மீனா அவன் உன் தம்பியா? அவன் உன் தம்பியா? தங்கக் கோபுரத்தில் வைத்துப் பார்க்கவேண்டியவனை தரையில் வைத்துப் பார்த்துவிட்டாயே மீனா? தரையில் வைத்துப் பார்த்துவிட்டாயே! கணவனைத் தெய்வம் என்றும் மனைவியைப் பக்தை என்றும் சொல்வார்களே! ஆனால் நீதான் தெய்வம் ஆகிக்கொண்டே போகிறாய். நான்தான் பக்தனிலும் கீழாய்ப் போய்க்கொண்டிருக்கிறேன். உன்னைத் தவிர இறைவன்கூட என்னை மன்னிக்கமாட்டான் மீனா. மன்னிக்கவே மாட்டான்'' அவன் விழிகளிலிருந்து கண்ணீர் வெள்ளோட்டமாக வழிந்தது.

''ஏன் மீனா இதை இதுவரை சொல்லாமல் மறைத்தாய்?''



''ஏன் அத்தான் எங்கள் குதூகல வாழ்க்கையைக் கண்டு நான் கண்ணீர் வீடுவது போதாதென்று அவனும் விடவேண்டுமா? அத்தான்! தம்பியீன் காணியைக் கூட ஈடு வைத்துக் குடித்தீர்களே. அதை மீட்பதற்காக நான் உங்களுக்குத் தெரியாமலே பணத்தைச் சேர்த்துக் கொண்டு வந்தேன். இன்னும் நூறு ரூபாதான் குறைகிறது பத்தாயிரம் ரூபாவாக அந்தப் பணம் மாறுவதற்கு. அதையும் சேர்த்துக் காணியையும் மீண்டு கண்ணனை தம்பி என்ற ஸ்தானத்தையும் மீண்டு வீடுவேன் என்றல்லவா இருந்தேன். அதற்கிடையில் அவசரப்பட்டு விட்டீங்களே அத்தான்; அவசரப்பட்டுவிட்டீங்களே!''

''இந்தாங்க அத்தான்! இந்தச் சங்கிலியையும் அடகு வைத்து அந்தக் காணியை மீண்டுகொண்டு எனது கிராமத்துக்கு வாங்க. நான் இப்பவே அங்கு செல்கின்றேன். எனக்கு ஏதோ அவன் அங்குதான் சென்றிருப்பான் எனத் தோற்றுகிறது'' என்று சொல்லிக் கொண்டே இரும்புப் பெட்டியைத் திறந்து பணத்தை எண்ணி அவன் கையில் கொடுத்தாள்.

இன்றுதான் அவள் பணத்தை முதல் தடவையாக நம்பிக்கையுடன் அவனிடம் கொடுக்கின்றாள்.

பாஸ்கரை முதியவர் கோவீலில் சேர்த்துவிடுகின்றார். பாஸ்கர் ''முருகா! முருகா!'' என்றுகொண்டே உள்ளே நுழைகின்றான். அவன் முகத்தில் சிலந்தி வலைகள் ஒட்டுகின்றன. கோவில் பாழடைந்து விட்டது என்பதை அவனுக்கு அந்தச் சிலந்தி வலைகள் உணர்த்தின.

கையிலுள்ள தடியால் அடித்து அடித்து உள்ளே சென்று முருகனை வழிபடுகின்றான்.

''முருகா! எனக்குத்தான் இக்கதியென்றால் உனக்குக் கூடவா இந்தக் கதி? பாழடைந்த உள்ளங்களைப் பிரதிபலிப்பதுபோல் அல்லவா இந்தக் கோவிலும் இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நிலையைப் பார்க்காமல் தடுப்பதற்காகவா முருகா என் கண்களையே பறிச்சிட்டாய்? அல்லது உன் பன்னிரண்டு கண்களில் இரண்டு கண்கள் இதைப் பார்த்துக் கெட்டுவிட்டதால் இவன் இல்லாததால்தானே இந்தக் கோவில் இந்த நிலைக்கு வந்தது. எனவே இவன்தான் குற்றவாளி எனக் கண்டு என் கண்களையே நீ பறித்திட்டாயா முருகா! அப்படி நீதான் பறித்திருப்பாயானால் ஏன் முருகா என்னை மட்டும் பறியாதுவிட்டுவிட்டாய்? உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. நான்தான் விசரன். என்னுடைய பாட்டுக்கே முணுமுணுத்துக்கொண்டு நிற்கின்றேன். இல்லை; இல்லை. நீதான் என் உடம்புக்கு வலிமையாகுதல் கொடுத்திருந்தால் தொண்டை கிழியக் கத்திக் கதறி என் கஷ்டத்தை எல்லாம் உனக்குக் கேட்கச் சொல்லியிருப்பேனே. நீதான் எனக்கு அதையும் கொடுக்கவில்லையே. நான் உன்னை மறக்கவில்லை. அதனாலேதான் இந்த நிலையிலும்கூட உன்னிடம் வந்திருக்கின்றேன். ஆனால், நீ எங்கே இருக்கிறாய் என்பதையே இந்த ஊர் மறந்துபோச்சு. இந்த மணிச் சத்தத்திலாவது திரும்ப வந்துவிட்டாய் என்பதைக் காட்டத்தான் போகின்றேன். அன்றைக்கு ஒலித்தாயே; வெற்றி மணியாக அல்லவா இருக்கும் என எண்ணினேன். ஏமாத்திட்டாயே! இன்றைக்கு ஒலிக்கப்போகும் மணி என்ன மணியோ அதை நீயே நிர்ணயித்துக்கொள் முருகா!''

இருபது வருடங்களுக்கு மேலாக ஒலிக்காமல் இருந்த மணியின் சங்கிலியை கையில் நன்கு சுற்றியபடியே முருகா! முருகா! என்றுகொண்டே அடிக்கத் தொடங்குகின்றான்.

கோவிலுள் எதிரொலித்த மணி இப்பொழுது ஊர் எல்லாம் எதிரொலிக்கின்றது. கறை பிடித்த அவன் வாழ்வைப்போல் கறை பிடித்திருந்தது அந்த மணி. அந்த மணியும் தொடர்ந்து அடித்துக்கொண்டே இருக்கின்றது. ஊர் பக்களும் வியப்புடன் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தார்கள். அவர்களுள் மீனாவும் ஒருத்தியாக இருந்தாள்.

— தொடரும்

# அகில் இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

## வலி - வடக்குக் கிளை

## 1972 — புது வருட உத்தியோகத்தர்கள்

தலைவர்: திரு. மூ. க. சுப்பிரமணியம், தலைமை ஆசிரியர்
குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்,
தெல்லிப்பழை.

உப தலைவர்: (i) திரு. வ. மகாலிங்கம், தலைமை ஆசிரியர்,
கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை,
தெல்லிப்பழை.

(ii) திரு. வே. கந்தையா, தலைமை ஆசிரியர்
உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்,
சுன்னாகம்.

காரியதரிசி: திரு. க. சுப்பிரமணியம், ஆசிரியர்
கம்பனை - தெல்லிப்பழை கிழக்கு,
தெல்லிப்பழை.

உப காரியதரிசி: (i) திரு. கா. சரவணமுத்து, ஆசிரியர்
அ. மி. பாடசாலை,
மாவிட்டபுரம்-தெற்கு, தெல்லிப்பழை.

(ii) திரு. மா. நாகமுத்து, ஆசிரியர்
கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை,

தனாதிகாரி: திரு. வீ. கனகசபாபதி, தலைமை ஆசிரியர்
விசாலாட்சி வித்தியாசாலை, மல்லாகம்.

உப தனாதிகாரி: திரு. மூ. நடராசா, தலைமை ஆசிரியர்
சதாநந்தா வித்தியாசாலை, அளவெட்டி.

நிர்வாக சபை அங்கத்தவர்கள்:

திரு. க. செல்லையா, தலைமை ஆசிரியர்
நாகேஸ்வரி வித்தியாசாலை, சுன்னாகம்.

திரு. சி. சிவசுப்பிரமணியம், கனிஷ்ட அதிபர்
அருணோதய கல்லூரி, அளவெட்டி.

திரு. செ. வரதராசப் பெருமாள், கனிஷ்ட அதிபர்
மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

திரு. செ. நடராசா, கனிஷ்ட அதிபர்
வீமன்காமம் மகாவித்தியாலயம், தெல்லிப்பழை.

திரு. சீ. நடேசு, தலைமை ஆசிரியர்
திருஞானசம்பந்தர் வித்தியாசாலை, சுன்னாகம்.

திரு. க. நடராசா, ஆசிரியர்
சைவப்பிரகாச வித்தியாசாலை, தெல்லிப்பழை.

செல்வி சி. தையல்முத்து, தலைமை ஆசிரியை
சீனன்கலட்டி ஞானோதய வித்தியாசாலை, அளவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ. இ. அ. பா. த. ஆசிரியர் சங்கம்

## கோப்பாய்க் கிளை — ஆரம்பம்: 22-9-72

## புதுவருட உத்தியோகத்தர்கள்

தலைவர்: திரு. அ. பொன்னம்பலம்,
யா/கோப்பாய் நாவலர் வித்தியாசாலை.

உப தலைவர்: திரு. அ. சுப்பிரமணியம்,
யா/நவக்கிரி அ. மி. த. பாடசாலை, புத்தூர்.

,, திரு. நா. இராசநாயகம்,
யா/ஊரெழு கணேசவித்தியாசாலை, சுன்னுகம்.

காரியதரிசி: திரு. மு. இராசநாயகம்,
யா/வளலாய் அ. மி. த. க. பாடசாலை, அச்சுவேலி.

உப காரியதரிசி: திரு. வே. பரமநாதன்,
யா/ஊரெழு கணேச வித்தியாசாலை.

,, திரு. நா. க கணபதிப்பிள்ளை,
யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை.

தனதிகாரி: திரு.ச. மூத்தையா,
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை.

உப தனதிகாரி: திரு. ஆ. குமரகுரு,
யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி.

நிர். உறுப்பினர்: திரு. ச. கதிரவேலு,
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.

,, ,, திரு. சு. தம்பிராசா,
யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.

,, ,, திரு. த. சிவசுப்பிரமணியம்,
யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலை.

,, ,, திரு. செ. சிவரத்தினம்,
யா/கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாசாலை.

,, ,, திரு. ந. க. செல்லத்துரை,
யா/ஆவரங்கால் நடராச இராமலிங்க வித்தி.

,, ,, திரு. அ. முதலித்தம்பி,
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.

,, ,, திரு. மு. சின்னையா,
யா/புன்னலைக்கட்டுவன் மகாவித்தியாலயம்.

கணக்குப் பரிசோதகர்: திரு. நட. ஐயாத்துரை,
யா/நவக்கிரி அ. மி. த. க. பாடசாலை.

# பங்குடைமை அறிமுகம் (12)

— வை. சி. சிவஞானம் —

### தளபாடம்

| | | | |
|---|---|---|---|
| மீதி | 10000 | மதிப்பிழிவு | 2000 |
| | | மீதி | 8000 |
| | 10000 | | 10000 |

### இருப்பு

| | | | |
|---|---|---|---|
| மீதி | 25000 | மீதி | 27800 |
| மதிப்புயர்வு | 2800 | | |
| | 27800 | | 27800 |

### அ. மு. க. ஒதுக்கம்

| | | | |
|---|---|---|---|
| மீதி | 800 | ம. பி. ப. கணக்கால் | 800 |
| | 800 | | 800 |

### நன்மதிப்பு

| | | | |
|---|---|---|---|
| நாதன் மூலதனம் | 3000 | காசால் | 5000 |
| தேவன் மூலதனம் | 2000 | | |
| | 5000 | | 5000 |

### மூலதனக் கணக்குகள்

| | நாதன் | தேவன் | பாலன் | | நாதன் | தேவன் | பாலன் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீதி | 60000 | 40000 | 40000 |
| மீதி | 69000 | 45000 | 40000 | ம.வி.ம. | 6000 | 4000 | |
| | | | | ந. மதி. | 3000 | 2000 | |
| | 69000 | 45000 | 40000 | | 69000 | 46000 | 40000 |

### நாதன், தேவன், பாலன் என்னும் பங்காளரின் ............................ தேதியன்றுள்ள ஐந்தொகை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மூலதனம் | | | நிலம் கட்டிடம் | | 90000 |
| நாதன் | 69000 | | தளபாடம் | | 8000 |
| தேவன் | 46000 | | இருப்பு | | 27800 |
| பாலன் | 40000 | | கடன்பட்டோர் | 8000 | |
| | | 155000 | கழி அ.மு.க.ஒதுக். | 800 | |
| கடன் கொடுத்தோர் | | 30500 | | | 7200 |
| | | | காசும் வங்கியும் | | 52500 |
| | | 185500 | | | 185500 |

பாலன் இலாப நட்டப் பங்கு $= \frac{1}{4}$

மீதி $= \frac{3}{4}$

நாதன் ,, ,, ,, $= \frac{3}{4} \times \frac{3}{5} = \frac{9}{20}$

தேவன் $= \frac{3}{4} \times \frac{2}{5} = \frac{6}{20}$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. பங்காளன் விலகல் (வெளியேறுதல்)

ஒரு பங்காளன் இளைப்பாறுதல், நீங்குதல், இறத்தல் காரணமாகப் பங்குடைமையிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படலாம். ஒரு பங்காளன் விலகும்போது பங்குடைமையிலிருந்து அவனுக்கு ஒப்பந்தப்படி அல்லது இணங்கியபடி சேரவேண்டிய தொகையை உடனே பணமாக அல்லது குறித்த தவணைகளில் வட்டியும் சேர்த்துக் கொடுத்தல் வேண்டும். ஒரு பங்காளன் விலகும்போது பின்வருவனவற்றால் பெறவேண்டிய தொகைகளைப் பெற அவனுக்கு உரிமையுண்டு. அவையாவன:

1. மூலதனம்
2. நன்மதிப்பில் அவன் பங்கு
3. சொத்துக்களின் பெறுமதி உயர்வால் ஏற்பட்ட இலாபத்தில் அவன் பங்கு
4. இலாப நட்டக் கணக்குத் தயாரிக்கப்பட்ட காலத்துக்கும் விலகும் காலத்துக்கு மிடையே உள்ள காலத்தின் இலாபப் பங்கு.

**மூலதனம்**

இறுதியாகத் தயாரிக்கப்பட்ட ஐந்தொகையில் காணப்படும் மூலதனமே அவனது மூலதனமாகக் கருதப்படும். இம் மூலதன மீதியுடன் அவனுக்குச் சேரவேண்டிய தொகைகள் கூட்டப்படல் வேண்டும். அவனால் தீர்க்கப்பட வேண்டிய பொறுப்புக்கள் கழிக்கப்பட வேண்டும். மீதித் தொகையையே அவன் பெற உரிமையுண்டு.

**நன்மதிப்புத் தொகை**

வியாபார நிலையத்தின் நன்மதிப்புத் தொகையில் விலகும் பங்காளனுக்கும் உரிமையுண்டு. எனவே விலகும்போது வியாபார நிலையத்தின் நன்மதிப்பின் உண்மைப் பெறுமதியில் அவன் பங்குத் தொகையை அவனது மூலதனத்துடன் சேர்த்தல் வேண்டும். அவ்வாறு அவனுக்கு வழங்கப்படுந் தொகை நன்மதிப்புக் கணக்கில் Dr.(      ) பக்கத்திலும் விலகும் பங்காளன் மூலதனக் கணக்கில் Cr.(      ) பக்கத்திலும் பதிதல் வேண்டும். இந்த நன்மதிப்புத் தொகையைப் பதிவழிக்க வேண்டுமாயின் இருக்கும் பங்காளர்கள் இலாப நட்டத்தைப் பிரிக்கும் வீதத்தில் பிரித்து அவர்களது மூலதனக் கணக்கில் Dr. (      ) பாகத்திலும் நன்மதிப்புக் கணக்கின் Cr.(      ) பாகத்திலும் பதிதல் வேண்டும்.

**சொத்துக்களை மறுபடி விலை மதித்தல்**

மறுபடி விலை மதித்தலால் Cr.(      ) மீதி வருமாயின் அது இலாபமாகும். அவ் விலாபத் தொகையில் விலகும் பங்காளரின் பங்குத் தொகை மறுபடி விலை மதித்தற் கணக்கின் Dr. (      ) பக்கத்திலும், விலகும் பங்காளன் மூலதனக் கணக்கின் Cr.(      ) பக்கத்திலும் பதிதல் வேண்டும்.



**இலாப நட்டப் பங்குத் தொகை**

ஒரு பங்காளன் விலகுந் திகதிவரையுள்ள இலாப நட்டக் கணக்கைத் தயாரித்து அவனுக்குரிய இலாபப் பங்குத் தொகையை அவனது மூலதனக் கணக்கில் Cr.(      ) பக்கத்தில் பதிதல் வேண்டும். தேறிய நட்டம் ஏற்படின் அவனது நட்டத் தொகையை அவனது மூலதனக் கணக்கின் Dr.(      ) பக்கத்தில் பதிதல் வேண்டும்.

**விலகும் பங்காளனுக்குரிய தொகையைக் கொடுத்தல்**

விலகும் பங்காளனுக்குக் கொடுக்கவேண்டிய தொகையைப் பணமாக உடனே முழுத்தொகையையும் கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தால் விலகும் பங்காளன் மூலதனக் கணக்கின் Dr.(      ) பக்கத்திலும் காசு அல்லது வங்கிக் கணக்கின் Cr.(      ) பக்கத்திலும் அத் தொகையைப் பதிதல் வேண்டும்.

விலகும் பங்காளனுக்குச் சேரவேண்டிய முழுத் தொகையையும் உடனே பணமாகக் கொடுக்காது குறிக்கப்பட்ட சில தவணைகளில் பகுதி பகுதியாகப் பணத்தைக் கொடுக்கலாம். அவ்விதம் கொடுப்பதாயின் விலகும் பங்காளன் மூலதனக் கணக்கில் Dr.(      ) பக்கத்தில் பதிந்து விலகும் பங்காளன் பேரில் கடன் கணக்கு ஒன்று ஆரம்பித்து அக் கணக்கில் Cr.(      ) பக்கத்தில் பதிதல் வேண்டும். செல்மதித் தொகைக்கு குறிக்கப்பட்ட வட்டி செலுத்தவேண்டும். வட்டிக் கணக்கின் Dr.(      ) பக்கத்திலும், கடன் கணக்கில் Cr.(      ) பக்கத்திலும் வட்டித் தொகையைப் பதிதல் வேண்டும். தவணைகளில் பணத்தைச் செலுத்தும்போது அத் தொகையைக் கடன் கணக்கின் Dr.(      ) பக்கத்திலும் காசு அல்லது வங்கிக் கணக்கின் Cr.(      ) பக்கத்திலும் பதிதல்வேண்டும்.

**இறந்த பங்காளனுக்குச் சேரவேண்டிய தொகைகள்**

இறந்த பங்காளனுக்குச் சேரவேண்டிய தொகைகளை அவனது மூலதனக் கணக்கில் பதிந்து, முழுத் தொகையையும் மூலதனக் கணக்கின் Dr.(      ) பக்கத்தில் பதிந்து இறந்த பங்காளர் தத்துவகாரர் கணக்கென ஒரு கணக்கை ஆரம்பித்து அக் கணக்கின் Cr.(      ) பக்கத்தில் பதிதல் வேண்டும். தத்துவகாரருக்கு முழுத் தொகையையும் உடன் பணமாகக் கொடுக்கலாம் அல்லது தவணை முறையிலும் கொடுக்கலாம்.

**உதாரணக் கணக்கு**

இலாப நட்டத்தை 3 : 2 : 1 என்ற ரீதியில் பங்கிடும் இராசா, இராமு, பாலு என்பவர்களின் ஐந்தொகை பின்வருமாறிருந்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| மூலதனம் | | | நிலம் கட்டிடம் | 65000 |
| இராசா | 60000 | | தளபாடம் | 10000 |
| இராமு | 40000 | | இருப்பு | 25000 |
| பாலு | 20000 | | கடன்பட்டோர் | 7500 |
| | | 120000 | வங்கி | 32000 |
| கடன் கொடுத்தோர் | | 20000 | காசு | 500 |
| | | 140000 | | 140000 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலு 1-6-72-ம் திகதியிலிருந்து பங்குடைமையிலிருந்து இளைப்பாறுவதாகத் தீர்மானித்தனர்.

(அ) பங்குடைமை நன்மதிப்பில் பாலுவின் பங்கு 3000 ரூபா எனத் தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) பங்குடைமைச் சொத்துக்கள் பின்வருமாறு மறுவிலை மதிக்கப்பட்டன.

நிலம் கட்டிடம் 70000 தளபாடம் 8000
இருப்பு 28500 கடன்பட்டோர் தொகையில் 500 அறவிட முடியாக் கடனொதுக்கமாக இருத்தல் வேண்டும்.

(இ) பாலு விலகும்போது முழுப் பணத்தையும் கொடுத்தல் வேண்டும்.

பங்காளன் விலகுதற்குரிய நாட் குறிப்புக்களையும், பேரேட்டுக் கணக்குகளையுஞ் செய்க.

**உதாரண விளக்கம் 23**

நாட் குறிப்பு

| | | | |
|---|---|---|---|
| நிலம் கட்டிடக் கணக்கு | Dr.( ) | 5000 | |
| மறுபடி விலை மதித் ல் கணக்கு | Cr.( ) | | 5000 |
| மறுபடி விலை மதித்தல் கணக்கு | Dr.( ) | 2000 | |
| தளபாடக் கணக்கு | Cr.( ) | | 2000 |
| இருப்புக் கணக்கு | Dr.( ) | 3500 | |
| மறுபடி விலை மதித்தல் கணக்கு | Cr.( ) | | 3500 |
| மறுபடி விலை மதித்தல் கணக்கு | Dr.( ) | 500 | |
| அறவிட முடியாக் கடனொதுக்கம் | Cr.( ) | | 500 |
| மறுபடி விலைமதித்தல் கணக்கு | Dr.( ) | 6000 | |
| இராசா மூலதனக் கணக்கு | Cr.( ) | | 3000 |
| இராமு ,, ,, | Cr.( ) | | 2000 |
| பாலு ,, ,, | Cr.( ) | | 1000 |
| நன்மதிப்புக் கணக்கு | Dr.( ) | 3000 | |
| பாலு மூலதனக் கணக்கு | Cr.( ) | | 3000 |
| பாலு மூலதனக் கணக்கு | Dr.( ) | 24000 | |
| வங்கிக் கணக்கு | Cr.( ) | | 24000 |

**பேரேட்டுக் கணக்குகள்**

மறுபடி விலைமதித்தல் கணக்கு

| | | | |
|---|---|---|---|
| தளபாடம் | 2000 | நிலம் கட்டிடம் | 5000 |
| அ. மு. க. ஒதுக்கம் | 500 | இருப்பு | 3500 |
| இராசா மூலதனம் | 3000 | | |
| இராமு ,, | 2000 | | |
| பாலு ,, | 1000 | | |
| | 8500 | | 8500 |

— தொடரும்

# பொது அறிவுப் போட்டி இல. 5

## முடிவு திகதி 30-11-72

## பரிசு ரூபா 10 பெறுமதியான அறிவு நூல்கள்

1. பாடசாலை மாணவ மாணவிகள் மாத்திரம் பங்குபற்றலாம்: பாடசாலை முகவரியே குறிக்கப்படல் வேண்டும்.
2. விடைகள் கீழேயுள்ள போட்டிக் கூப்பனிலேதான் எழுதப்படுதல் வேண்டும். கூப்பன்களை வெட்டித் தபால் அட்டையில் ஒட்டியும் அனுப்பலாம்.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

பொது அறிவுப் போட்டி இல. 5
வெற்றிமணி
253 1/1, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.

1. 9-10-72இல் நடைபெற்ற இடைத் தேர்தலின்போது புத்தளத்தில் வெற்றி பெற்றவர் யார்?
2. இவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்?
3. இவர் எத்தனை அதிகப்படி வாக்குகளால் வெற்றி பெற்றார்?
4. ஆபிரிக்காக் கண்டம் பரப்பில் இலங்கையைப்போல் எத்தனை மடங்கு பெரியது?
5. காரை சுந்தரம்பிள்ளை எழுதிய எந்த நூலுக்கு சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்தது?
6. ஆன் இளவரசிக்குக் குதிரைச் சவாரி பழக்கியவர் பெயர் என்ன?

பொது அறிவுப் போட்டி இல. 5 — விடைகள்

1. 2.
3. 4.
5. 6.

பெயர் ..........................................

பாடசாலை முகவரி ..........................................

..........................................

..........................................
கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

நங்கையர் விரும்பும் நவநாகரீக
* நகைகளுக்கும் * வைரங்களுக்கும்
புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்
கே. என். எம்.
மீரான் சாஹிப்
— தங்கப்பவுண் நகைமாளிகை —
கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்.
K. N. M. Meeran Sahib
JEWELLERS & DIAMOND MERCHANT
— SOVEREIGN PALACE —
Kannathiddy, Dial: 585 JAFFNA.

திருக்குறள்
இலங்கைக்கு முதன்முதலாக நீல சோப்பை
அறிமுகப்படுத்தியவர்கள்
மில்க்வைற் ஸ்தாபனத்தாரே.
1-7-72 தொடக்கம்
மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில்
திருக்குறள் அச்சிட்டு வெளிவருகின்றது.
மேலுறைகளைச் சேகரித்து,
பரிசுத் திட்டத்தில் பங்குபற்றுங்கள்.
மில்க்வைற் சோப் தொழிற்சாலை
தபாற் பெட்டி இல. 77
யாழ்ப்பாணம்.

இப் பிரசுரம், சக்தி அச்சகத்தினருக்காக, யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள சக்தி அச்சகத்தில், பொன். இராசரத்தினம் அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org